INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

HRDAG Statisticians for Human Rights

7 ஜனவரி 2019

W ITJPSL.COM
E ITJPSL@GMAIL.COM

EXECUTIVE DIRECTOR:
YASMIN SOOKA

**இலங்கை: இறந்தவர்களை கணக்கெடுக்கும் செயற்திட்டம்**

**ஊடக அறிக்கை : இலங்கைப் போரில் இறந்தவர்களின் பெயர்பட்டியலை தயாரிக்கும் உலகளாவிய முயற்சி ஆரம்பம்**

ஜெகானஸ்பேர்க் / சான் பிரான்சிஸ்க்கோ : 2009 இல் இலங்கையில் போர் முடிவுக்கு வந்து 10 ஆண்டுகள் நிறைவுக்கு முன்னதாக, இறுதி இறப்பு எண்ணிக்கையை மதிப்பீடு செய்வதற்கு இனப் போரில் இறந்தவர்களின் பெயர்களைச் சேகரிப்பதற்கு உதவி செய்யுமாறு இரண்டு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் வேண்டுகோள் விடுக்கின்றன. சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டம் (ITJP) மற்றும் மனித உரிமைகள் பற்றிய தரவுகளை ஆராயும் குழு (HRDAG) ஆகியன இலங்கைக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள அமைப்புக்களை தற்போது தங்களிடம் உள்ள இழப்பு விபரங்களைப் பகிர்ந்து கொள்ளுமாறும் அத்துடன் வெளியில் சென்று புதிய விபரங்களைப் பதிவு செய்யுமாறும் கேட்டுக் கொள்கின்றன.

'நாம் இறந்தவர்களுக்கு அவர்களுடைய பெயர்களையாவது சேகரித்து மரியாதை செலுத்தும் கடமைப்பாட்டினைக் கொண்டுள்ளோம்' என ITJP இன் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார், ' மனித இழப்பின் அளவினை கணக்கெடுத்துக் கொள்வது முக்கியமானதாகும் அத்துடன் ஒன்றுடன் ஒன்று ஒப்பிட்டு நாங்கள் தயார் செய்யப்போகும் இறுதிப் பெயர்ப்பட்டியலானது சமூகங்களுக்கு முக்கியமானதான நினைவுச் சின்னம் உருவாக்கும் செயற்பாட்டிற்கு உதவியானதாக இருக்கும்'.

போர் முடிவடைந்து பத்துவருடங்கள் கடந்தும் இலங்கையில் 2009 இல், அதற்கு முன்னரான தசாப்தங்களில் கூட பத்தாயிரங்களுக்கு அண்மித்ததாக எத்தனை பேர் இறந்தார்கள் என்று எவருக்கும் தெரியாது. ஒரு புள்ளி விபரவியல் அணுகுமுறையை பயன்படுத்துவதன் மூலம் இறுதி இறபப் எண்ணிக்கையின் நிகழ்தகவினை மதிப்பீடு செய்வதே இந்த முயற்சியின் நோக்கமாகும். இதேமாதிரியான அணுகுமுறையே 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற போரின் இறுதி நாட்களில் சரணடைந்து காணாமறற்போனவர்களின் <u>**எண்ணிக்கையை மதிப்பீடு செய்வதற்கும்**</u> அண்மையில் பயன்படுத்தப்பட்டது.

'அடுத்துவரும் சில மாதங்களில் தமது குடும்பங்களுடன், நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் கதைத்து இறந்தவர்களின் பெயர்களைச் சேகரிக்குமாறு உலகம் முழுவதிலும் உள்ள தமிழ் மக்களை நாங்கள் வேண்டிக்கொள்கின்றோம். இந்த தகவல்களைச் சேகரிப்பதற்கு நாங்கள் <u>**ஒரு**</u>

**வடிவத்தை** முன்வைத்துள்ளோம் என HRDAG என்ற அமைப்பிளைச் சேர்ந்த பற்றிக் போல் தெரிவித்துள்ளார். நாட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் பல குழுக்கள் பெயர்ப் பட்டியல்களை

ஏற்கனவே சேகரிக்க ஆரம்பித்துள்ளன. இறந்தவர்களின் பெயர் விபரங்களை பதிவு செய்தலானது கிடைக்கக்கூடிய விபரங்களை ஒழுங்குபடுத்தும் ஒரு வழியாகும். அத்துடன் சேகரிக்கப்பட்ட தகவல்களில் இருந்து நாங்கள் புள்ளிவிபரவியல் மாதிரிகளைப் பாவித்து எத்தனை பேர் காணமற்போயிருக்கலாம் என மதிப்பிடமுடியும். ஒரு பெயர் மீண்டும் மீண்டும் பதிவு செய்யப்படுவது பற்றி நீங்கள் கவலைப்படாதீர்கள்!. நாங்கள் பெயர்பட்டியல்களை அதற்கேற்றவாறு பார்த்துக் கொள்வோம்.'

நாடுகடந்துள்ள தமிழர்களிடமிருந்து தகவல்களைச் சேகரித்துக் கொள்வது என்பது எம்முடைய ஆரம்ப நோக்கமாக இருந்தாலும் இந்த செயற்திட்டத்தில் சிங்கள மற்றும் முஸ்லீம் மக்களின் போர் தொடர்புபட்ட இறப்புக்களின் தகவல்களையும் சேகரிப்பதற்கு நாம் தயாராக உள்ளோம்.

இந்த தகவல்களை HRDAG அல்லது ITJP இற்கு **itjpsl@gmail.com** அல்லது **info@hrdag.org** என்ற மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கலாம்.
இந்த தகவலை வழங்கியவர் மற்றும் அனுப்பியவர்களின் விபரங்கள் இரகசியமாக வைக்கப்படும் என்பதை தயவுசெய்து குறிப்பிட விரும்புகின்றோம்.
எவ்வாறான தகவல்கள் தேவை என்பதைக காட்டும் ஆங்கிலம் சிங்களம் மற்றும் தமிழில் உள்ள தரவிறக்கம் செய்யக்கூடிய விரிதாளைப் பெற்றுக்கொள்ள **இங்கே** அழுத்தவும்.

முற்றும்.

INTERNATIONAL
TRUTH
AND JUSTICE
PROJECT